# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை 2010 டிசெம்பர்

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினம் 2010 யூன் மாதம் 15ஆம் திகதியாகும். சகல தனிப்பட்ட விண்ணப்பதாரிகளும் இவ்வறிவித்தலை பூரணமாக வாசித்து நன்கு விளங்கிக்கொண்டு தமது விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்தல் வேண்டும். **விண்ணப்பப்படிவத்தில் பாட எண்ணைக் குறிக்கும்போது சரியான பாட எண்ணைக் குறிப்பதில் விசேட கவனமெடுத்தல் வேண்டும்.**

02. **பாடசாலை விண்ணப்பதாரிகளுக்கான விண்ணப்பங்கள்:**

இதற்கு முன்னர் க.பொ.த. (சா.தர)ப் பரீட்சைக்கு மாணவர்களைத் தோற்றச்செய்த பாடசாலைத் தலைவர்களுக்கு இவ்விண்ணப்பப்படிவங்கள் 2010.05.20ஆம் திகதிக்கிடையில் கிடைக்கும்வண்ணம் தபாலிலிடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அவ்வேளையிலும் ஏதாவதொரு பாடசாலைக்கு இவ்விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கவில்லையாயின் உடனடியாக இத்திணைக்களத்தின் பாடசாலைப் பரீட்சைகள் கிளைக்கு அதுபற்றி அறிவிக்க வேண்டும்.

**பாடசாலையிலிருந்து விலகிய விண்ணப்பதாரிகள் மாத்திரமே தனிப்பட்ட பரீட்சார்த்திகளாக விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர். பாடசாலையில் கற்றுக்கொண்டே தனிப்பட்ட பரீட்சார்த்தியாக விண்ணப்பிப்பவர்கள் பரீட்சைத் தடைக்குட்படுத்தப்படுவார்கள்.**

03. **தனிப்பட்ட பரீட்சார்த்திகள்:-**

அரசினர் பாடசாலைகளில், கட்டணம் அறவிடப்படாத அங்கீகரிக்கப்பட்ட பாடசாலைகளில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பிரிவெனாக்களில் கற்றுக்கொண்டிராத எவரும் க.பொ.த. (சா.தர)ப் பரீட்சைக்குத் தனிப்பட்ட முறையில் விண்ணப்பிக்க முடியும். இப்பரீட்சைக்காக தனிப்பட்ட பரீட்சார்த்திகளிடமிருந்து விண்ணப்பங்கள் 2010 யூன் மாதம் 15ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

04. **பரீட்சைக்குத் தோற்றுவதற்காக தனிப்பட்ட பரீட்சார்த்திகள் தமது நிரந்தர வதிவிடத்திற்குக் கிட்டிய நகரத்தைத் தெரிவு செய்ய வேண்டும்.**

05. இவ்வறிவித்தலில் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக விண்ணப்பப்படிவங்கள் பரீட்சார்த்திகளினாலேயே தயாரிக்கப்பட வேண்டும்.

06. விண்ணப்பப்படிவங்களை 28 x 21 செ.மீ. அளவான தாளில் தயாரிக்கப்படுவதுடன், 01 முதல் 12 வரையான **கூடுகள்** முதற் பக்கத்திலும் 13 முதல் 14 வரையான **கூடுகள்** மறுபக்கத்திலும் அமையத்தக்கதாக விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படல் வேண்டும்.

07. பூர்த்தி செய்த விண்ணப்பப்படிவங்களைப் பதிவு தபாலில் **"பரீட்சை ஆணையாளர் நாயகம், பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், தபாற் பெட்டி 1503, கொழும்பு"** எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்பப்படிவம் அனுப்பப்படும் உறையின் இடப்பக்க மேல் மூலையில் **"க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை டிசெம்பர் 2010, நகர எண்: ....."** எனக் குறிப்பிடவும்.

08. ஒரு விண்ணப்பதாரி ஒரு விண்ணப்பப்படிவத்தை மட்டுமே அனுப்புதல் வேண்டும். **ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் அனுப்பப்படின் விண்ணப்பதாரியின் பரீட்சார்த்தித் தன்மை அல்லது பெறுபேறு வெளியிடப்பட்ட பின்னர் முழுப் பெறுபேறுகளும் முற்றாக இரத்துச் செய்யப்படும் என்பதையும் கட்டாயம் அறிந்திருத்தல் வேண்டும். அத்தோடு நீண்ட காலப் பரீட்சைத் தடைக்கும் உள்ளாக நேரிடலாம்.** மேலும் ஓர் உறையினுள் உள்ளடக்கப்பட வேண்டியது ஒரு விண்ணப்பப்படிவம் மாத்திரமே ஆகும். விண்ணப்பப்படிவங்கள் தெளிவாகவும் ஒழுங்காகவும் நிரப்பப்படுவதுடன் அதற்காக வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களையும் கடைப்பிடிக்க வேண்டும்.

09. வேறு நிறுவனம்/நபர்களினால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களைப் பயன்படுத்திக் கொள்வதாயின் இவ்வறிவித்தலின் கீழ்க் காட்டப்பட்டுள்ள பாட எண்களையும் நகர எண்களையுமே குறிப்பிட வேண்டும். **விண்ணப்பப்படிவத்தை அஞ்சலில் இடுவதற்கு முன் அதனை வாசித்துச் சரிபார்த்து அதிலுள்ள இலக்கங்கள் மற்றும் விபரங்கள் யாவும் அறிவித்தலில் கூறப்பட்டுள்ளபடி பூரணப்படுத்தப்பட்டுள்ளனவா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.**

10. **ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்**

விண்ணப்பதாரிகள் பரீட்சை எழுதுவதற்குப் பரீட்சை மண்டபத்திற்கு வரும் எல்லா வேளைகளிலும் தங்கள் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகப் பின்வரும் அடையாள அட்டைகளில் ஒன்றைக் காண்பிக்க வேண்டும்.

(அ) ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்படும் தேசிய அடையாள அட்டை.
(ஆ) செல்லுபடியாகும் கடவுச் சீட்டு (பாஸ்போட்).

11. **பரீட்சைக் கட்டணம்**

அரசினர் பாடசாலைகள், கட்டணம் அறவிடப்படாத தனியார் பாடசாலைகள் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பிரிவெனாக்கள் ஆகியவற்றிலிருந்து பரீட்சைக்கு விண்ணப்பிப்பவர்கள் தவிர்ந்த **ஏனைய எல்லா விண்ணப்பதாரர்களும் உரிய கட்டணத்தைச் செலுத்துதல் வேண்டும்.**

அஞ்சல் அலுவலகத்தில் அல்லது உப அஞ்சல் அலுவலகத்தில் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்ள வேண்டும். கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் உரிய கூட்டில் ஒட்டி அனுப்பவும். காசுக்கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. (அதன் போட்டோ பிரதியொன்றையும் பதிவுத் தபாலில் அனுப்பியமைக்கான இரசீதையும் விண்ணப்பதாரி தம்வசம் வைத்திருத்தல் வேண்டும).

**முக்கிய கவனத்திற்கு:**

(அ) இப்பரீட்சைக்கென செலுத்தப்பட்ட கட்டணம் முழுமையாக அல்லது பகுதியாக மீளளிக்கப்படவோ அல்லது வேறு பரீட்சைக்கான கட்டணமாக மாற்றப்படவோ இடமளிக்கப்பட மாட்டாது.

(ஆ) விண்ணப்பத்தை அனுப்பிய பின் பாட எண்ணையோ, நகர எண்ணையோ மாற்ற இடமளிக்கப்பட மாட்டாது.

(இ) விண்ணப்பப்படிவம் கோரப்படும் இறுதித் திகதிக்குப் பின் அஞ்சல் அலுவலகத்திற்கு பணம் செலுத்தியுள்ள விண்ணப்பப்படிவங்களும், இறுதித் தினத்திற்குப் பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்களும் நிராகரிக்கப்படும்.

(ஈ) இரண்டாம் பாடத்தொகுதிக்குரிய

(40) சங்கீதம் (கீழைத்தேய)
(41) சங்கீதம் (மேலைத்தேய)
(42) சங்கீதம் (கர்நாடகம்)
(44) நடனம் (சுதேச)
(45) நடனம் (பரதம்)
(50) நாடகமும் அரங்கியலும் (சிங்களம்)
(52) நாடகமும் அரங்கியலும் (தமிழ்)
(53) நாடகமும் அரங்கியலும் (ஆங்கிலம்)

ஆகிய பாடங்களுக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் செய்முறைப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். எழுத்துப் பரீட்சை, செய்முறைப் பரீட்சை ஆகிய இரு பகுதிகளுக்கும் தோற்றிய பரீட்சார்த்திகளுக்கு மாத்திரமே இறுதிப் பெறுபேறு வழங்கப்படும்.

**அனுர எதிரிசிங்க**
**பரீட்சை ஆணையாளர் நாயகம்.**

6/4/2010/1
பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை,
தபாற் பெட்டி 1503,
கொழும்பு.
2010 மே மாதம் ……ஆம் திகதி.

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - 2010 டிசம்பர்**

(அலுவலக உபயோகத்திற்கு)

01. பரீட்சைக்குத் தெரிவு செய்த நகரமும் நகர எண்ணும்:-
நகரம்:-................................ நகர எண்:-
(விண்ணப்பதாரியின் நிரந்தர வதிவிடத்திற்குக் கிட்டிய நகரத்தைத் தெரிவு செய்ய வேண்டும்).

02. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் (அறிவுறுத்தல் இலக்கம் 02ஐப் பார்க்கவும்).
(1) ஆங்கிலத்தில் (கெப்பிற்றல் எழுத்தில்):-
..........................................................................................................
(2) தமிழில்:-.................................................................................................

03. முகவரி:- ஆங்கிலத்தில் (கெப்பிற்றல் எழுத்தில்) தமிழில்
................................................ ................................................
................................................ ................................................
................................................ ................................................

04. பால்:- ஆண் 0 பெண் 1

05. பிறந்த திகதி:- ஆண்டு: ................ மாதம்: ............... திகதி: ........................
06. தேசிய அடையாள அட்டையின் இலக்கம்:- ..........................................................................
07. பிறப்புச் சான்றிதழின் இலக்கம்:- ....................................................................................

08. மொழி மூலம்:- சிங்களம் 2 தமிழ் 3 ஆங்கிலம் 4

09. செலுத்திய பரீட்சைக் கட்டணம் (எண்ணில்):-......................... எழுத்தில்:-...................................
(I) பற்றுச் சீட்டு இலக்கம்:-..................... (II) திகதி:-...............
(III) செலுத்திய அஞ்சல் அலுவலகம்:-...................................................

10. தோற்றும் பாடங்களின் முழுத்தொகை:-

11. **விண்ணப்பிக்கும் பாடங்கள்** **பாட எண்** **முதலாம் பாடத்தொகுதி**

01. ................................. 07. ....................................
**இரண்டாம் பாடத்தொகுதி**
02. ................................. 08. ....................................
**மூன்றாம் பாடத்தொகுதி**
03. ................................. 09. ....................................
04. .................................
05. .................................
06. .................................

12. **விண்ணப்பதாரரின் சான்றிதழ்:-**

இவ்விண்ணப்பப்படிவத்தில் காட்டப்பட்டுள்ள சகல விபரங்களும் சரியானவை என்றும் உண்மையானவை என்றும் பரீட்சை விதிகளுக்கும் பரீட்சார்த்திகளுக்கு விதிக்கப்பட்டுள்ள சட்ட திட்டங்களுக்கும் இணங்குகின்றேன் என்றும் அதற்குக் கட்டுப்படுகின்றேன் என்றும் இப்பரீட்சை தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு இணங்குகின்றேன் என்றும் இத்தால் தெரிவிக்கின்றேன்.

..............................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி:- ..........................

13. பற்றுச் சீட்டின் மூலப்பிரதியை கழராதபடி ஒட்டவும். அதன் போட்டோ பிரதியொன்றை தம்மிடம் வைத்துக்கொள்ளவும். பற்றுச் சீட்டின் மூலப்பிரதி ஒட்டப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

| பாடங்களின் எண்ணிக்கை | 1 | 2 | 3 | 4 | 5 | 6-9 |
|---|---|---|---|---|---|---|
| கட்டணம் | 50/- | 60/- | 70/- | 80/- | 90/- | 125/- |

பணம் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் மூலப்பிரதியை கழராதபடி இங்கு ஒட்டவும். அதன் போட்டோ பிரதியொன்றை தம்மிடம் வைத்துக்கொள்ளவும்.

14. **கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:-**

கையொப்பம் உறுதிப்படுத்துபவரின் முன்னிலையில் விண்ணப்பதாரி கையொப்பமிடல் வேண்டும். கையொப்பத்தை உறுதிப்படுத்துபவராலேயே பிறப்புச் சான்றிதழிலுள்ள பிறந்த திகதியும் தேசிய அடையாள அட்டையின் இலக்கமும் விண்ணப்பப்படிவத்தில் எழுதப்படல் வேண்டும்.

(அ) இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் .......................................... எனும் பெயருடைய விண்ணப்பதாரியை எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரியும்.

(ஆ) அவரின் பிறப்புச் சான்றிதழின்படி அவரின் பிறந்த திகதி ...................... என்பதையும், பிறப்புச் சான்றிதழ் இலக்கம் .................. என்பதையும், அவரின் தேசிய அடையாள அட்டை இலக்கம் ............................... என்பதையும், அவர் என் முன்னிலையில் கையொப்பம் இட்டார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

.....................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

விண்ணப்பதாரியின் முகவரி:- ..........................................................................................

உறுதிப்படுத்தும் கிராம அலுவலரின் கையொப்பம்:- ..........................................................................

உறுதிப்படுத்தும் கிராம அலுவலரின் பெயர்:- ...................................................................................

கிராம அலுவலர் பிரிவும், இலக்கமும்:- ..........................................................................................

(பதவிக்குரிய பதவி முத்திரையை இடவும்).

முகவரி:-..........................................................................................................................
..................................................................................................................................

திகதி:- .....................

# விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்கள்

01. பரீட்சை நிலையங்கள் நிறுவப்படும் நகரங்கள் கீழே காட்டப்பட்டுள்ள நகரப் பட்டியலிலிருந்து தாம் தெரிவுசெய்த நகரத்தையும் நகர எண்ணையும் தெளிவாக அடைப்பில் எழுதவும். தங்கள் நிரந்தர வதிவிடத்திற்குக் கிட்டிய நகரத்தைத் தெரிவு செய்யவும். (சகல நகரங்களுக்கும் இலக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன).

02. முழுப்பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களிலும் தமிழிலும் எழுதவும்).
உதாரணம்:- (அ) MAHENDRARAJA BADMAJA
(ஆ) மகேந்திரராஜா பத்மஜா

03. முழுமையான முகவரியை (ஆங்கில கெப்பிற்றல் எழுத்திலும் தமிழிலும் எழுதுங்கள்).
உதாரணம்:- (அ) ஆங்கிலத்தில்: SARATHA ROAD, KARAITIVU-01.
(ஆ) தமிழில்: சாரதா வீதி, காரைதீவு-01.

04. உரிய கூட்டினுள் புள்ளடி இடவும்.
உதாரணம்:- பெண் விண்ணப்பதாரி எனின், ஆண் [ 0 ] பெண் [ 1 ☒ ]

05. பிறப்புச் சான்றிதழில் குறிப்பிட்டுள்ளபடி உங்களின் பிறந்த திகதியை எழுதுங்கள்.
ஆண்டு:.................... மாதம்:.................... திகதி:..................

06. தேசிய அடையாள அட்டையின் இலக்கத்தை மாத்திரம் எழுதுங்கள். (அஞ்சல் அறிமுக அட்டையினதோ அல்லது கடவுச் சீட்டினதோ இலக்கத்தை **எழுத வேண்டாம்**).

07. பிறப்புச் சான்றிதழின் இலக்கத்தை எழுதுங்கள். (அதன் தொடர் எண்ணையோ அல்லது விண்ணப்பப்படிவத்தின் இலக்கத்தையோ **எழுத வேண்டாம்**).

08. உரிய கூட்டினுள் புள்ளடியிடுக.
உதாரணம்:- விண்ணப்பதாரியின் மொழி மூலம் தமிழ் எனின்,

சிங்களம் [ 2 ] தமிழ் [ 3 ☒ ] ஆங்கிலம் [ 4 ]

09. **பரீட்சைக் கட்டணம்:-**

(i) பரீட்சைக்குரிய கட்டணத்தை அஞ்சல் அலுவலகம் அல்லது உப அஞ்சல் அலுவலகத்தில் செலுத்தி அதற்கான பற்றுச் சீட்டைப் பெற்று உரிய விபரங்களை விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடுங்கள். (அப்பற்றுச் சீட்டின் போட்டோ பிரதியொன்றை தம்மிடம் வைத்துக் கொள்ளுங்கள்).

(ii) ஒரு பாடத்திற்கு ரூபா 50/- (ஐம்பது), இரண்டு பாடங்களுக்கு ரூபா 60/- (அறுபது), மூன்று பாடங்களுக்கு ரூபா 70/- (எழுபது), நான்கு பாடங்களுக்கு ரூபா 80/- (எண்பது), ஐந்து ப-ாடங்களுக்கு ரூபா 90/- (தொண்ணூறு), ஆறு முதல் ஒன்பது பாடங்களுக்கு ரூபா 125/-(நூற்று இருபத்தைந்து).

10. தோற்றும் பாடங்களின் தொகையை எழுதுங்கள். [ 09 ]
உதாரணம்:- 09 பாடங்களுக்குத் தோற்றுவதாயின்,

11. இதன் இறுதியிலுள்ள பாடப் பட்டியலின்படி தாம் தோற்றவுள்ள **பாடங்களையும் பாட எண்ணையும்** சரியாகக் குறிப்பிடுங்கள். விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்ட பாடங்களை பின்னர் மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

**பாடங்களைத் தெரிவு செய்தல்:**

(அ) கீழ்க் காட்டப்பட்டுள்ள வரையறையின் கீழ்ப் பரீட்சார்த்திகள் 09 பாடங்களைத் தெரிவு செய்ய முடியும்.

| பாட எண் | பாடங்கள் |
|---|---|
| (11) முதல் (16) வரை | சமயம் |
| (21, 22) | மொழியும் இலக்கியமும் [(21) சிங்களம் / (22) தமிழ்] |
| (31) | ஆங்கில மொழி |
| (32) | கணிதம் |
| (33) | வரலாறு |
| (34) | விஞ்ஞானம் |
| (60) முதல் (72) வரை | முதலாம் பாடத் தொகுதி |
| (40) முதல் (52) வரை | இரண்டாம் பாடத் தொகுதி |
| (80) முதல் (94) வரை | மூன்றாம் பாடத் தொகுதி |

ஒவ்வொரு பாடத் தொகுதியிலிருந்தும் ஒவ்வொரு பாடத்தை மாத்திரம் தெரிவுசெய்ய முடியும். பாட எண் 21ஐ விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிக்கு பாட எண் 64 இற்கு விண்ணப்பிக்க முடியாது. அவ்வாறே பாட எண் 22ஐ விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிக்கு பாட எண் 65 இற்கு விண்ணப்பிக்க முடியாது.

12. விண்ணப்பதாரி தனது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொள்ளச் செல்லும் போது பிறப்புச் சான்றிதழையும் தேசிய அடையாள அட்டையையும் கொண்டு செல்ல வேண்டும். விண்ணப்பப்படிவம் அனுப்பும் வேளையில் தேசிய அடையாள அட்டை பெற்றிருக்கவில்லையாயின் அதுபற்றி குறிப்பிடவும்.

13. உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அஞ்சல்/உப அஞ்சல் அலுவலகத்தில் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டை கழராதபடி உரிய இடத்தில் ஒட்டவும்.

14. **கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:-**

தாம் வசிக்கும் கிராம அலுவலர் பிரிவிலுள்ள கிராம அலுவலரினாலேயே உறுதிப்படுத்த வேண்டுமென்பதுடன், கிராம அலுவலரின் பெயர், கிராம அலுவலர் பிரிவையும் இலக்கத்தையும் குறிப்பிட்டு பதவி முத்திரையிட்டு உறுதிப்படுத்த வேண்டும்.

15. **பார்வையற்ற விண்ணப்பதாரிகள் / விசேட தேவைகள் உடைய விண்ணப்பதாரிகள்:-**

பார்வையற்ற / விசேட தேவைகள் உடைய விண்ணப்பதாரிகளுக்காக அனுப்பப்படும் விண்ணப்பப் படிவத்தின் **இடப்பக்க மேல் மூலையில் "பார்வையற்ற விண்ணப்பதாரி/விசேட தேவைகள் உடைய விண்ணப்பதாரி"** என **சிவப்பு** நிறத்தினால் குறிப்பிட வேண்டும்.

<u>பாடப் பட்டியல்</u>

***சமயம்**

(11) புத்த சமயம்
(12) சைவ சமயம்
(14) கத்தோலிக்க சமயம்
(15) கிறிஸ்தவம்
(16) இஸ்லாம்

***மொழியும் இலக்கியமும்**

(21) சிங்கள மொழியும் இலக்கியமும்
(22) தமிழ் மொழியும் இலக்கியமும்

*(31) ஆங்கில மொழி
*(32) கணிதம்
*(33) வரலாறு
*(34) விஞ்ஞானம்

***முதலாம் பாடத் தொகுதி**

(60) வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும்
(61) புவியியல்
(62) குடியுரிமைக் கல்வி மற்றும் சமூக நிர்வாகம்
(63) முயற்சியாண்மைக் கற்கை
(64) இரண்டாம் மொழி (சிங்களம்)
(65) இரண்டாம் மொழி (தமிழ்)
(66) பாளி
(67) சமஸ்கிருதம்
(68) பிரெஞ்சு
(69) ஜேர்மன்
(70) ஹிந்தி
(71) ஜப்பான்
(72) அரபு

***இரண்டாம் பாடத் தொகுதி**

(40) சங்கீதம் (கீழைத்தேய)
(41) சங்கீதம் (மேலைத்தேய)
(42) சங்கீதம் (கர்நாடகம்)
(43) சித்திரம்
(44) நடனம் (சுதேச)
(45) நடனம் (பரதம்)
(46) இலக்கிய நயம் (ஆங்கிலம்)
(47) இலக்கிய நயம் (சிங்களம்)
(48) இலக்கிய நயம் (தமிழ்)
(49) இலக்கிய நயம் (அரபு)
(50) நாடகமும் அரங்கியலும் (சிங்களம்)
(51) நாடகமும் அரங்கியலும் (தமிழ்)
(52) நாடகமும் அரங்கியலும் (ஆங்கிலம்)

***மூன்றாம் பாடத் தொகுதி**

(80) தகவல் தொடர்பாடல் தொழினுட்பம்
(81) விவசாயமும் உணவுத் தொழினுட்பவியலும்
(82) கடற்றொழிலும் உணவுத் தொழினுட்பவியலும்
(83) ஆக்கத்திறன் தொழினுட்பவியல்
(84) நுண்கலை
(85) மனைப் பொருளியல்
(86) சுகாதாரமும் உடற்கல்வியும்
(87) தொடர்பாடல் ஊடகக் கற்கை
(92) மின் ஆவணப்படுத்தலும் சுருக்கெழுத்தும் (சிங்களம்)
(93) மின் ஆவணப்படுத்தலும் சுருக்கெழுத்தும் (தமிழ்)
(94) மின் ஆவணப்படுத்தலும் சுருக்கெழுத்தும் (ஆங்கிலம்)